| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| | மாவட்டம் : | புதுக்கோட்டை | காலம் : | 15/06/2024 | முதல் | 19/06/2024 |
| | அறிக்கை எண் : | 048/ 2024 | வெளியீட்டு நாள் : | 14/06/2024 | | |

## புதுக்கோட்டை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°-28° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (09.06.2024 முதல் 13.06.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 19-06-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09/06 | 10/06 | 11/06 | 12/06 | 13/06 | தேதி | நாள்-1 15/06 | நாள்-2 16/06 | நாள்-3 17/06 | நாள்-4 18/06 | நாள்-5 19/06 |
| 0.2 | 0.0 | 0.0 | 0.1 | 0.6 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 35 | 35 | 37 | 37 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 35 | 35 | 34 | 34 |
| 25 | 27 | 27 | 28 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 25 | 25 | 25 | 24 |
| 6 | 5 | 6 | 7 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 5 | 5 | 6 |
| 83 | 72 | 74 | 78 | 76 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 60 | 60 | 70 | 70 | 60 |
| 60 | 51 | 47 | 59 | 61 | | 30 | 30 | 30 | 40 | 30 |
| 8 | 20 | 23 | 17 | 13 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 10 | 12 | 12 | 14 |
| தென் மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | தென் மேற்கு | காற்றின் திசை | மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென்மேற்கு |

**குறுஞ்செய்தி :**

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 34°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 14 கி.மீ வேகத்தில், மேற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

**பொது ஆலோசனை:**

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (14 - 27 ஜூன் 2024):**

**மழைப்பொழிவு :**

14-06-2024 - 20-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை ஒட்டியே மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

21-06-2024 - 27-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

14-06-2024 - 20-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 32° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 34° செல்சியஸ் முதல் 38° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

14-06-2024 - 20-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : வெண்டை, மல்லிகை, கால்நடை.**

**வெண்டை:**

வெண்டையில் போரான் சத்து பற்றாக்குறையினால் காய்கள் சிறுத்து, உருமாறி வளைந்து காணப்படும்.

இதனை நிவர்த்தி செய்ய 1 லிட்டர் நீரில் 3½ கிராம் போராக்ஸ் மற்றும் 0.5மில்லி ஒட்டுப்பசை கலந்து இலைகளின் மீது நன்கு படும்படி தெளிக்க வேண்டும்.
மருந்து தெளிக்கும் வேலைகளை கண்டிப்பாக மழை இல்லாத நாட்களிலேயே மேற்கொள்ள வேண்டும்.

**மல்லிகை:**

மல்லிகை பயிரில் மேங்கனீசு சத்து பற்றாக்குறை ஆங்காங்கே தென்படுகின்றது. இவ்வகையான சத்துப் பற்றாக்குறையின் அறிகுறியாக இலைகள் மஞ்சள் நிறமாகவும், நரம்புகள் பச்சை நிறமாகவும், இலைகளில் நரம்பிடை சோகையும் காணப்படும்.

இதனை நிவர்த்தி செய்ய ஒரு செடிக்கு 5 முதல் 10 கிராம் மேன்கனீசு சல்பேட்டை மண்ணில் கலந்து இடலாம் அல்லது

ஒரு லிட்டர் தண்ணீருக்கு 50 கிராம் மேன்கனீசு சல்பேட் என்ற அளவில் கலந்து இரண்டு வார கால இடைவெளியில் இலை வழியாகவும் தெளிக்கலாம்.

**கால்நடை:**

கால் நடைவளர்க்கும் விவசாயிகளின் கவனத்திற்கு இந்த தருணங்களில் தங்களின் மாடுகளை கோமாரி எனும் கால்கானை வாய்க்கானை நோய் தாக்குவதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக பெரும் பொருளாதார சேதாரம் ஏற்பட வாய்ப்பு உள்ளது

ஆகையால் ஜூன் மாதத்தில் அருகில் உள்ள அரசு கால்நடை மருந்தகத்தை அணுகி தங்களது மாடுகளுக்கு கோமாரி எனப்படும் கால்கானை வாய்க்கானை நோய்க்கான தடுப்பூசியினை போட்டுக் கொள்ள வேண்டும்.

மேலும் நான்கு மாதத்திற்கு ஒரு முறை கோமாரி நோய்த் தடுப்பூசியை தவறாமல் போட வேண்டும்.